## ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான மையங்களாக பல்கலைக் கழகங்கள் திகழ வேண்டும்!

# தமிழ்நாட்டின் உயர்கல்வியில் உலகத் தரத்தை உருவாக்குவோம்!

### துணை வேந்தர்கள் - பதிவாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, ஏப்.18 -

**“ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான மையங்களாக பல்கலைக் கழகங்கள் திகழ வேண்டும்” என்றும் “தமிழ்நாட்டின் உயர் கல்வியில் உலகத்தரத்தை உருவாக்குவோம்” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணை வேந்தர்கள், பதிவாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும் போது சூளுரை மேற்கொண்டார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.04.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.இரகுபதி, மு.பெ.சாமிநாதன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மா.சுப்பிரமணியன், முனைவர் கோவி செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பதிவாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நேற்றுமுன்தினம் (16.4.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின்கீழ் 21 பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாடுகள் குறித்தும், திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக் கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழ் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கீழ் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகம், சட்டத்துறையின் கீழ் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், கலை பண்பாட்டுத் துறையின் கீழ் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறிப்புரை ஆற்றினார். உயர் கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, உயர்கல்வித் துறையின் புதிய முன்னெடுப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விளக்கக் காட்சியினை காண்பித்து விளக்கினார்.

**கூட்டத்தின் தொடக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

● இந்தியாவின் கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு ஒளி விளக்காக உயர்ந்து நிற்கிறது.

● உயர்கல்வியில் நம்முடைய மொத்த சேர்க்கை விகிதம் (GER) 51.3 விழுக்காடாக இருக்கிறது. இது தேசிய சராசரியைவிட இருமடங்கு அதிகம். தேசிய கல்விக்கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ளாமல், நிராகரித்திருக்கிறோம். ஆனால், அதை செயல்படுத்தினால் 2030-ஆம் ஆண்டுக்குள் அடையலாம் என்று சொல்கின்ற இலக்கான 50 விழுக்காட்டையும் (GER) நாம் தற்போதே திராவிட மாடல் கொள்கையாக தாண்டியிருக்கிறோம்.

● 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், 31 புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. மேலும், NIRF தரவரிசையில் முதல் 100 இடங்களில், 22 பல்கலைக்கழகங்களுடன் தமிழ்நாடு முன்னணியிலும் இருக்கிறது.

**உலகளாவிய மாற்றங்களுக்கேற்ப மாணவர்களை உருவாக்குவோம்!**

தரமான கல்வியால் நாம் நாட்டை வழி நடத்திக் கொண்டிருக்கிறோம். இதுபோதும் என்று நாம் மனநிறைவு அடைந்து விடக் கூடாது. பெரிய கனவுகளைக் காணவும், புதுமைகளை உருவாக்கவும், உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப நம்முடைய மாணவர்களை தயார்படுத்தவும்தான் நாம் இங்குகூடி இருக்கிறோம்.

தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தை, நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சியை, அடுத்த நிலைக்கு உயர்த்த வேண்டிய ஒரு முக்கியமான காலக் கட்டத்தில்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

# ரூ.38.40 லட்சம் மதிப்பில் - குளிரூட்டப்பட்ட மெரினா கிளை நூலகம்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

*சென்னை, ஏப். 18 -*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.38.40 இலட்சம் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

சென்னை மாநகர நூலக ஆணைக்குழுவின் கீழ் மெரினா கடற்கரை பகுதியில் செயல்பட்டு வரும் மெரினா கிளை நூலகம், நூலக நிதியின் மூலம் ரூ.38.40 இலட்சம் மதிப்பீட்டில் குளிரூட்டப்பட்ட நூலகமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகம் கூடும் மெரினா கடற்கரைப் பகுதியில் அவர்களை ஈர்க்கும் வகையிலான முகப்பு பகுதியுடன், நூலகத்தின் சுற்றுச்சுவர் உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சுவரின் உட்பகுதியில் கடல்வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் நோக்கில் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது.

நூலகத்தின் முன்புறத்தில் மூங்கில் வளைவுடன் கூடிய பாதை அமைத்து இருபுறமும் வசதியான இருக்கைகள் மற்றும் சிறுவர்கள் விளையாடும் வகையில் ஊஞ்சல் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நூலகத்தில் சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில், பட விளக்க கதைப்புத்தகங்கள் அடங்கிய comic's corner அமைக்கப்பட்டுள்ளது. இந்த கிளை நூலகத்தில் சென்னை நகரம் குறித்த தகவல்கள் அடங்கிய அரிய நூல்கள் உள்ளிட்ட 7500 புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், 1,337 உறுப்பினர்களும், 3 புரவலர்களும் இந்நூலகத்தில் உள்ளனர்.

புதுப்பிக்கப்பட்ட மெரினா கிளை நூலகத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.4.2025) திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மெரினா கிளை நூலகத்தின் வளர்ச்சிக்காக தலா 1000 ரூபாய் நிதி வழங்கி நூலகத்தின் புதிய புரவலர்களாக தங்களை இணைத்துக் கொண்ட 9 நபர்களுக்கு புரவலர் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், ஏ.ஆர். பி.எம்.காமராஜ், டாக்டர் பி.சந்தரமோகன், முனைவர் பொ.சங்கர், கவிஞர். மனுஷ்யபுத்திரன், அருண் கிருஷ்ணமூர்த்தி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றியிருக்கும்

# முக்கிய வரலாற்றுக் கடமை!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி மனிதரல்ல; ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தின் மகத்தான உயிர் மையம். அவர் இன்றோ, நேற்றோ பிறந்தவரல்ல; தி.மு.கழகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றைக்குத் தோற்றுவித்தாரோ, அன்றைக்குப் பிறந்தவர். ஆம்; பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட அரசியல் தத்துவங்களின் அருமை வாரிசாக நமக்குக் கிடைத்திருப்பவர்; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏற்று முன்னெடுத்த இலட்சியங்களுக்கும் தனயன் அவர்! அந்த வகையில் தத்துவங்களின் தலைமகன் அவர்!

‘திராவிட நாடு திராவிடருக்கே!’ என்று, திராவிட நாடு கோரிக்கை முழக்கத்தை அண்ணா அவர்கள், தமிழ்நாட்டின் திசையெங்கும் எதிரொலித்திடச் செய்து, தமது நா - பேனா வன்மையினாலே, தமிழ்மக்களின் பேராதரவைத் திரட்டினார். அந்தப் புத்தெழுச்சிப் பிரவாகத்தின் வீச்சையும் வேகத்தையும் கண்டு மனம் புழுங்கிய ஒன்றிய அரசினர், பிரிவினைத்தடைச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தனர். அதன் தொடர்ச்சியாக, நாணலைப் போல வளைந்து, நேரம் வரும்போது நிமிர வேண்டும் என்ற சாகசத்துடன், திராவிட நாடு கோரிக்கையைக் கை விடுவதாக அறிவித்தார் அண்ணா.

தனி நாடு கோரிக்கையைக் கை விட்டாலும், அந்தக் கோரிக்கைக்காக எடுத்து வைக்கப்பட்ட காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று அவருக்கே உரிய அறிவாழ்ந்த நெஞ்சத்துடன் அறிவித்தார். தொடர்ந்து, இந்திய நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் ஊனமின்றிக் காத்திடவும், மாநில மக்களின் வளம் பெருக்கி, இந்திய மண்ணின் வலிமை ஓங்கிடவும், மாநிலங்களுக்குத் தேவையான உரிமைகளும், அதிகாரங்களும் வேண்டும் என வலியுறுத்தி வந்தார்.

**“மொழி, பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் திராவிட நாடு கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை. மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார், பல அதிகாரங்களை, பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்; அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம்: அதை நாங்கள் விட்டுவிடவில்லை. திராவிட நாட்டைத்தான் விட்டு விட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள் என்று கேட்டால், ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்தி எதிர்ப்பை விடமாட்டோம்... நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டும் என்பதற்காக வாதாடுகிறேன்” என்று, ஷேக்ஸ்பியரின் ‘ஜூலியஸ் சீஸரில்’ மார்க் ஆண்ட்டனி, உணர்ச்சி பொங்கவும் அறிவு மேலிடவும் பொழிந்ததைப் போல, அண்ணா காரண விளக்கங்களை அடுக்கிக் காட்டினார், சட்டப் பேரவையிலேயே!**

என்றும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிப் பழக்கப்பட்டவர் அல்ல அண்ணா; வெளிப்படையானவர், எதார்த்தமானவர். எனவே, தாம் முன்வைத்த காரணங்களில் எவ்வித சமரசமும் இன்றி, இறுதி மூச்சுவரை உறுதிப்பாட்டுடன் இருந்தார். அதனால்தான் கடைசியாகத் தம்பிமார்களுக்கு எழுதிய கடிதத்தில், கூட்டாட்சி (Federalism) குறித்தும், மத்தியில் நிலவும் அதிகாரக் குவிப்பு (more and more centralised) பற்றியும், கொள்கைக் குறிப்புகளை வரைந்து மறைந்தார்.

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், அண்ணா அவர்களின் அறிவுச் சுவடுகளை ஒட்டியே, அடுத்தடுத்த நடவடிக்கைகளை அளந்தளந்து மேற்கொண்டார். மத்திய - மாநில உறவு நிலைமைகளை ஆய்ந்தறிய இராஜமன்னார் குழு அமைத்தார்; மாநில சுயாட்சித் தீர்மானம் ஒன்றை, இந்தியாவிலேயே முதல் முறையாக, சட்டப் பேரவையிலே நிறைவேற்றினார்.

தி.மு.கழகம், மாநில சுயாட்சி - மாநில உரிமைகள், தேவையான அதிகாரங்கள் என்று எடுத்துச் சொன்னால், பிரிவினைக்காகப் பொதுமக்களை அணி திரட்டிய கட்சிதானே என்று பேதப்படுத்தி, சந்தேகக் கண்ணோட்டம் கொள்பவர்கள், பழைய வரலாற்றுப் பதிவுகளை மறந்து விடுகிறார்கள் அல்லது திட்டமிட்டு மறைத்து விடுகிறார்கள்.

**1945லேயே, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி, தனது தேர்தல் அறிக்கையிலே, பல்வேறு பகுதிகளும் விருப்பத்துடன் ஒன்றிணையும் இந்தியக் கூட்டாட்சி** (The Federation of India must be a willing union of its various parts) **என்றும்; இணையும் அப்பகுதிகள் அனைத்திற்கும் அதிகபட்ச சுதந்திரம்** (Maximum of freedom to the constituent units) **என்றும்; குறிப்பிட்டிருந்ததை, இன்றைக்கு எடுத்துக் காட்டினால் வியப்பு மேலிடக் கூடும்.**

1947- ஆம் ஆண்டிலே, அரசமைப்புப் பேரவையிலே (Constituent Assembly), பண்டிதநேரு அவர்கள், இந்திய மாநிலங்கள் அனைத்தும் தன்னாட்சி கொண்டவையாகவும், எஞ்சிய அதிகாரங்களைச் செலுத்துபவையாகவும் இருக்க வேண்டும் (The States shall possess and retain the status of autonomous units with residuary powers) என்று வலியுறுத்தினார் என்றால், கூட்டாட்சி - மாநில சுயாட்சி எனும் கருத்தியல் மீதான அடிப்படை நோக்கத்தை அறிந்து கொள்ள இயலும்.

அதனால்தான், 1967 தேர்தல் அறிக்கையிலேயே கழகம், எஞ்சிய அனைத்து அதிகாரங்களையும் மாநிலங்கள் பெற்றிடவும், மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும், அதற்கேற்ற வண்ணம் இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் எனவும், உறுதியெடுத்துப் பிரகடனம் செய்தது; தொடர்ச்சியாகப் பிரகடனம் செய்து, பரப்புரை செய்து வருகிறது.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சிந்தித்துத் தெளிவுபடுத்திய’ மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என்ற மாபெரும் இலட்சியத்தை, அவர்களின் கொள்கை வாரிசான முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டப் பேரவையிலே தற்போது முன்னெடுத்திருக்கிறார்.

**அவர் சுட்டிக்காட்டி இருப்பதை, குறைத்தும் திரித்தும் கூறுவோர், ஒன்றை மனதிலே கொள்ள வேண்டும்; தி.மு.கழகம், தேசப் பற்றிலோ, தேசத்தின் ஒற்றுமையிலோ, ஒருமைப் பாட்டிலோ, வேறெவர்க்கும்– எந்தக் கட்சிக்கும் எந்த விதத்திலும் குறையாத, அழுத்தமான, தீர்மானமான, நம்பிக்கை கொண்டுள்ள இயக்கம். தி.மு.க. கோருவது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் வழி அமைத்துக் கொடுப்பது. கூட்டாட்சிக் கொள்கையையும், மாநிலங்களுக்கான உரிமை முழக்கத்தையும் முன்னெடுத்து இருப்பவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள். வரலாற்றுக் கடமை என்ற அடிப்படையில், பேரவையிலே அவர் செய்த அந்தக் கொள்கை முழக்கம், அரங்கேறி அனைவர்க்கும், அனைத்து மாநிலங்களுக்கும், ஆட்சிக் கட்சிகள் அனைத்திற்கும் பயனளிக்கப் போவது காலத்தின் கட்டாயம்!**

•••

**கி.இராஜமாணிக்கம்**

•••